போங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி ௨. } பிங்கள௵ வைகாசிமீ 1917௵ மேமீ { பகுதி ௪.

புதல்வர் கடமை.

(86-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பூரு, அரங்கநாதசாஸ்திரி, பீஷ்மன இவர்களாவது உயர்குடிப் பிறப்பும் உயர்ந்த பதவியும் உற்றவர்கள். இழிகுலத்தவனும், பரம ஏழையும், பரம்பரை அடிமையுமே யான சிறுவன் ஒருவன், எவரும் எதிர் பாராதபடி, தன்னலம் வெறுத்து, தன்தந்தைபாற் காட்டிய பேரன்பையும், அதனால் அவன் எய்திய அதி உன்னத நிலையையும் பின்வரும் உண்மைச் சரிதையால் உணருங்கள்:—

ஐரோப்பாவிலே, ஸ்பெயின் தேசத்தில் உள்ள ஸெவில் என்னும் ஊரிலே, மியூரில்லோ (Murillo) என்ற சித்திராசிரியன் ஒருவன் இருந்தான். தன் சித்திராலயத்தில் உள்ள திரைச்சீலைகளில் அரைகுறையாக முடிந்த அழகிய சித்திரங்களை அடிக்கடி அவன் காண்பதுண்டு. இவை இராக் காலத்திலேயே எழுதப் பட்டவையாதலின், அவற்றை எழுதியோர் எவரென எவருமறிய முடியவில்லை.

ஒருநாள் அவனது மாணவர்கள் அவனுக்கு முந்தியே சித்திரசாலை வந்து சித்திரம் பயிற்றுவிக்கும் அறைக்குள் நுழைந்ததும், ஆங்கு தொங்கிய ஒருதிரையில தீட்டப் பெற்றிருந்த சித்திரம் ஒன்றைக் கண்டனர். அவர்கட்கு உண்டான அதிசயம் இவ்வளவவ்வளவில்லை. அவர்கள் அதனைத் தமக்குத்தோன்றியவாறு வியந்து கூறிக்

கொண்டிருக்கும்போதே, ஆசிரியனை மியூரில்லோவும் வந்துவிட்டான். வந்தவன் அச்சித்திரத்தின் அளவற்ற ஆச்சரியமும் ஆநந்தமும்கொண்டவனாய் உற்று நோக்கி "ஆ! ஆ! அரைகுறையாக இருக்கும்போதே இது எவ்வளவு நேர்த்தி! இது யார் எழுதியது?" என்று ஒவ்வொரு மாணவனையும் விசாரித்தான். அவர்களில் எவனுமே தான் எழுதியது என ஒப்புக்கொள்ள முன் வரவில்லை. ஆசான் அவர்களை நோக்கி, "சங்கோசப்படாதீர்கள். உள்ளபடியே இதையெழுதியவன் மிக சாமர்த்தியசாலி. சின்னாட்களில் அவன் என்னினும் மேன்மை பெறத்தக்கவன் என்பது எனது அந்தரங்க அபிப்பிராயம். யார் எழுதினீர்கள்? சொல்லுங்கள்" என்றான். அப்பொழுதும் எவனும் வாய் திறக்கவில்லை. 'ஒருவனேனும் உண்மை சொல்லவில்லையே' என்று மாணவர்களை அவர்களுடைய கோழைத் தனத்திற்காக நிந்தித்து, அதிகோபத்துடன், "இந்தப் பயல்களில் எவன் நேற்றிரவு இங்கு வந்தவன்? உனக்குத்தெரியுமா ஸிபஸ்டியான்?" என்று அருகில் நின்ற அடிமைச்சிறுவனை அதட்டிக் கேட்டான். அதட்டவும், அவன் நடுநடுங்கிக்கொண்டே "இறைவ! இவர்களில் எவருமே இங்கு வந்ததை நான் சத்தியமாய்க் காணவில்லை" என்றான்.

அதுகேட்டு மியூரில்லோ, "நல்லது. நீ இங்கேயே காவல் செய்துகொண்டிரு. 'எவரும் அறியாமலே இங்குவந்து செல்வோன் இன்னான்' என நீ கண்டு பிடித்து நமக்கு நாளையே தெரிவியா விட்டால் முப்பது கசையடி முதுகிற் பெறவேண்டும். ஜாக்கிரதை" என்று கொக்கரித்துச் சென்றான்.

அடிமைச் சிறுவன் பயபக்தியுடன் அவனை வணங்கிச்சென்று அன்றிரவு அத்திரை யண்டையே படுத்து அயர்ந்து தூங்கினான். 'டிங், டிங்' என்று மணி 3 அடித்ததும, அவன் அதி விரைவில் எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டு, "ஆ! ஆ!! தூங்கியே விட்டேன்! ஆனாலும என்ன? பார்ப்போம் இன்னும் 3-மணி என்னதே. அது கழிந்ததும் மீதிப்பொழுதன்றோ ஆசானது?" என்று கூறிக் கொண்டே ஒரு 'பூசு கோல' (Brush) எடுத்து, முந்திய இரவில் தான் அரை குறையாய் முடித்து நிறுத்தி யிருந்த அச் சித்திரத்தை அழிக்க அதன் அருகிற் சென்றான். ஆயினும், தியங்கிப் பின் வாங்கினான். "சீ! அழிக்க மனம் வரவில்லையே! ஒன்று செய்கிறேன்.

அந்த குறையாக இருக்கும் இதனை முற்ற முடித்துப் பின்பு அழித்து விடுவதில் என்ன தவறு?'' என்று எண்ணி, அதை நன்கு சித்திரிக்கலானான். அவ் வுருவிற்கு இங்குக் கொஞ்சம் வர்ணமும், அங்குக் கொஞ்சம் பூச்சும் கொடுக்க ஆரம்பித்தான். மூன்று மணியும் மூன்று விநாடியாகப் பறந்தது. ஆயினும்,

''மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்,—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.''

என்றபடி, அவன் தன் கருமத்திலேயே கண்ணாக இருந்ததால், பொழுது கழிந்தது அவனுக்குத் தெரியவே இல்லை. சித்திரமும் அநேகமாய் நிறைவேறியது. அது கிறிஸ்தவரால் 'லோகரக்ஷகர்' எனக் கருதிப் போற்றப்படும் இயேசு நாதரை ஈன்ற திருஉதரம் படைத்த மங்கையாக் கரசியான மேரி யம்மையின் திரு உரு. அதன அழகை அவன் பக்தி சிரத்தையுடன் வேண்டிய மட்டும் வியந்து ஆநந்தித்தானதும், அதனை அழிக்க விரைந்து சென்றான். அப்பொழுது விடிந்து மூன்று மணி நேரமாய் விட்டது. முதல் நாள் ஏற்றிய விளக்கு இன்னும எரிந்து கொண்டிருந்தது. படத்திற் கை சென்றதும், செல்லாததும், அவன கை பின்னுக்கு இழுக்கப் பட்டு இறுகப் பற்றப் பட்டது. திடீரெனச் சந்தடி கேட்டது. திரும்பிப் பார்த்தான் ஸிபஸ்டியான். உரிய காலத்தில் வகுப்பிற்கு வந்து, சந்தடியேது மின்றி ஒளிந்து, அவனது சித்திர நேர்த்தியை வியந்து நின்ற மூரிலலோவும், மாணவர்களும அவனைச் சூழ்ந்து கொண்டனர். உடனே ஸிபஸ்டியானுக்கு அச்சமும் திகிலும அதிகரித்தன. உளமும் தேகமும் நடுங்கின. ஏனெனில், எப்படியிருந்தாலும் அவன கேவலம் அடிமை தானே? அடிமைக்கு ஏது சுதந்தரம்? விலைக்குப் பெறும் விலங்காதியவற்றினும வெகு கேவலமாக நடத்தப்படுவோர் அடிமைகள். அவர்களை எவ்வளவு கொடுமையாகவும் நடத்தலாம். கொலையும் செய்யலாம். இவற்றிற் கெல்லாம் சட்டம் இடங்கொடுத்திருந்தது. ஆதலால் ''ஐயோ! தகாதன் செய்தோமே? அன்றும் மெய் உரைத்தோம் இல்லையே! என்ன தீங்கு இனி சம்பவிக்குமோ!'' என்று கூற்றுவனைக் கண்ட உயிர்போல் பதை பதைத்து நின்றான். அதன்

பின் நடந்த விஷயத்தைச் சம்பாஷணை ரூபமாகவே அறிவிக்கிறோம்.

மியூரில்லோ:—எய்! வா இங்கே. உனது இறைவன் யார் ஸிப ஸ்டியான்?

ஸிபஸ்டியான்:- (முழுந்தாளிட்டு) தாங்களே எனதிறைவன். இப் பிழைபொறுத் தருள வேண்டும். (காலில் விழுந்து அழுகிறான்)

மியூரில்லோ:—முட்டாள்! எழுந்திருடா " 'எஜமானன்' அல்லது 'தலைவன்' என்ற அர்த்தத்தில் நான் 'இறைவன்' என்றவார்த்தையை உபயோகிக்க வில்லை. 'உனது சித்திராசிரியன் யார்? யாரிடம் இதெல்லாம் கற்றுக் கொண்டாய்?' என்றேன்?.

ஸிபஸ்டியான்:—(வாய் புதைத்து வணக்கத்துடன்) தாங்களே எனது நல்லாசான்.

மியூரில்லோ:—(அதிசயத்துடன்) நானுவது உனக்கு ஆசானுவதடா? என்னடா உளறுகிறாய்? அரைக்கால் நாழிகைகூட நான் உனக்கு எதுவுமே கற்றுத் தரவில்லையே!

ஸிபஸ்டியான்:— தாங்கள் நேரிற் கற்றுத் தராவிடினும் எல்லாம் இவ்விடத்திய அநுக்கிரகம் தான். இந்தப் பிள்ளைகளுக் கெல்லாம் தேவரீர் கற்றுத் தருவதைக் கவனித்து வரும்படியான பாக்கியம் பெற்றேன். தினம் கவனித்ததைச் சிந்தித்தேன். சிந்தித்ததைப் பயின்றேன். "சித்திரமும் கைப்பழக்கம்" என்பதுபோல், ஏதோ கொஞ்சம் கற்றேன்.

மியூரில்லோ:—அப்படியா? உள்ளபடியே நீ கெட்டிக்காரன் தான். இங்குள்ள யாவரினும்நீ பன்மடங்கு பயன் எய்தியது எனக்கு பரம சந்தோஷமே. (மாணவர்களை நோக்கி) நல்லது பிள்ளைகாள்! (ஸிபஸ்டியானைச் சுட்டி) இவனை இப்பொழுது என்ன செய்யலாம்? இவனுக்குரியது தண்டனையா? வெகுமதியா?

மாணவர்கள்:—(ஏகோபித்து) வெகுமதி! வெகுமதி!

மியூரில்லோ:—அப்படியா? வெகுமதியா தரவேண்டும்? நல்லது (புன்சிரிப்புடன் ஸிபஸ்டியானை நோக்கி) அடே! பிள்ளைகள் 'வெகுமதி' என்கிறார்கள் நீ அதிர்ஷ்டசாலி. உனக்கு என்னடா வேண்டும்?

ஒருபையன்:—(ஸிபஸ்டியானிடம் ரகஸ்யமாய்) அடே ஜோடி மூண்டாக கேளடா.

மற்றொருவன்:—அடே! அது வேண்டாம் அடா. பணம் கேளடா. பத்துப் பதினைந்து கிடைக்கும்; முண்டாசும் வாங்கிக்கலாம.

வேறொருவன்:—அடே அதெல்லாம் வேண்டாமடா. பாவம்! நல்ல படுக்கையும் சோறும் கேளடா முதலில்.

பின்னுமொருவன்:—அதெல்லாம் வேண்டாமடா. உபாத்தியாயருக்கு இன்றைக்கு உன் மேல் இவ்வளவவ்வளவில்லாத சந்தோஷம். நீ என்ன கேட்டாலும கொடுத்தே விடுவார்; உன் அடிமைத்தனம் நீங்குமாறு இப்போதே கேள்.

ஆயினும் அவன் சிந்தை இவை எதிலும் செல்லவில்லை. சின்னுழிகைக் கெல்லாம், முழங்காற் படியிட்டு நின்று, நாக்குழற, உடல் இளக, மெய் பதற, தீனமான குரலுடன், “எனது கிழத் தந்தையின் அடிமைத்தனம் நீங்குமாறு அருள்க” என்று இரந்தனன்.

இளகிவிட்டது பியூரில்லோவின் மனம். உடனே அவன் சிறுவனை நோக்கி “உன் கைத்திறம், இச் சித்திரத்தாலும், தன்னயங்கருதாத் தன்மையும் பிதுர்ப்பக்தியும், நின் பிரார்த்தனையாலும இனிது விளங்குகின்றன. என்வாக்கை நிறைவேற்றியே தீருவேன். உன் தந்தையின் அடிமைத்தனம் மட்டும் நீங்கியதென எண்ணேல். இந்த நிமிஷம் முதல், நீயும் என் அடிமை இல்லை. என்போன்ற சர்வசுதந்தரமும் உனக்கு இனி உண்டு. கல்வி பயில்வதிற் கன சிரத்தையும், அதனினுந் தாழாப் பெருந்தன்மையும் வாய்ந்த நின்னை, என்னையறியாமலே சிஷனாகப் பெற்ற என் பெருமை தான் என்னே! ‘யான் பெற்ற பெருந்தவப் பே(று) என்னையின்றி இருநிலத்திற் பிறந்தோர்கள் யார் பெற்றாரோ?’ இனி நீ என் மகனே” எனக் கூறி, அவனையே ஸ்வீகாரபுத்திரனாகக் கொண்டான்.

“மகன் தந்தைக்(கு) ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்! என்னும் சொல்”

என்ற பொய்யா மொழிக் கிலக்காகிய இவ் ‘ஏகலைவன்’ தன் வளர்ப்புத் தந்தையும் அபிமான ஆசானுமான பியூரில்லோவினும் சிறந்து விளங்கிப் புகழுற்றான்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(92-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தீய்ந்தும் புலமெல்லாம் தேர்ந்துலவாக் கோட்டையினால்
வாய்ந்தவிருந் தோம்பினார் வள்ளுவரே!—ஆய்ந்தொருவர்
வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் (௫)

(அ-ம் முதலியன):—புலம்-வயல், உலவாக்கோட்டை - குறைந்து அழியா நெற் கோட்டை, வாய்ந்த - பெற்ற, ஓம்பினார் - உபசரித்தார், ஒருவர்-'அடியார்க்கு நல்லார்' என்ற ஒரு வேளாளர், மிச்சில்-உண்ட மிச்சத்தை, மிசைவான்-உண்பவனது, புலம்-வயலில்.

புலமெல்லாம் தீய்ந்தும் உலவாக் கோட்டையால் ஒருவர் விருந்தோம்பியது:—மதுரையில், சிவபக்தியிற் சிறந்த 'அடியார்க்கு நல்லார்' என்ற ஒருவர், சிவனடியார்கட்கு நாடோறும் அன்னம் அளித்தலே பெருங்கடமையாகக் கொண்டு, அவ் விருந்தினர்க்கு அளித்து மீந்ததை உண்டு, காலங் கழித்து வந்தார். இவரது நற்குணங்களை உலகறியச் செய்ய வேண்டி, சிவபிரான், இவரை வறுமைப் பிணிக்குள்ளாக்கினர். ஆக்கவே, அவர் கடன் வாங்கிச் செய்வன செய்து வந்தனர். கடன் கொடுப்பாரற்றும் போகவே, அவர் வருந்தி, தருமசீலையாகிய தம் மனைவியுடன் "சிவ சந்நிதி யடைந்து "ஐயோ! அடியார் பூஜை தடைபடுகின்றதே! யாது செய்வோம்!" எனக் கதறி இறக்கத் துணிந்த பொழுது, சிவபெருமான் அசரீரியாய் "வேண்டாம்! வேண்டாம்! எடுக்குந் தோறும் குறையாத 'உலவாக் கோட்டை' யாகிய நெல் தந்தோம்" என்று அருளினர். உடனே அவர் அக மகிழ்ந்து மனைவியுடன் வீடு திரும்பிக் கடவுள் அருளிய நெற் கோட்டையைக் கண்டு வியந்து, யாவர்க்கும் விருந்தளித்து உவந்து, முடிவில் சிவபத முற்றனர்" என்பதே.

புன்புறாத் தம்மிற் புகுவேடற் கீந்துடலை
மன்புலவர் நாடுசென்ற வள்ளுவரே!—என் பெருமை!
செல் விருந்(து) ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு . (௬)

(அ-ம் முதலியன).—புல்-அற்பமான, இல்-வீடு, மன்-பெருமை வாய்ந்த, புலவர் நாடு-தேவலோகம்.

புன் புறா வேடனுக்கு உடலீந்து புலவர் நாடு சென்றது:—ஒரு வனத்தில் ஒரு வேடன், கையிற் குருவியும், கூடும், கண்ணியும், தடி முதலான

வேட்டைக் கருவிகளும் எடுத்துக் கொண்டு திரியும்போது, அசநியிற்
பெரு மழை வந்து இருட்டிக் கொண்டு பிரளய காலம் போற் காற்றெ
ழும்பியது. அப்போது அவ் வனசரன் நடுக்கலெடுத்து, மரத்தின் சார்பில்
நின்று, "பகவானே! இவ் வேளையில் உன்னைவிட வேறொருவரும் காப்
பாற்றுவார் இல்லை" என எய்கி நின்றான். அவ்வேளை, அம்மர மீதிருக்கும்
புறு, தன் பெட்டை வரவில்லை யென்று விசனத்துடன், "இன்று என்
நாயகி வரவில்லை. அவளை யாராயினும் பிடித்தார்களோ, என்னவோ?
அவளில்லாமல் இல்லெங்கும் பாழாகத் தோற்றுகிறது. மனையாளில்லா
வீடு சுடுகாடு போன்றுளது. கற்பும், கணவன் இன்புறும் வகைச் செய
லுமுள்ள இல்லாளை யுடையான் எவனோ, அவனே பாக்கியவான்" என்று
புலம்பிற்று. அதுகேட்டு, வேடனது கைக் கூட்டில் அகப்பட்ட பெண்
புறு, துக்கித்து, "முற் பிறப்பில் தீவினை செய்தவர்களுக்குப் பல வகைப்
பட்ட தளையும், சிறையும், நோயும், வறுமையும் சம்பவிக்கின்றன. அஃதி
ருக்கட்டும். எச்சமயத்தில் எது நேரிடுமோ, அஃதெப்போதும் பிசகுகிற
தில்லை" என்று சொல்லித் தன் பதியை நோக்கி, "பிராண நாதா! இன்று
நம் வீட்டுக்கு வந்த இவ் வேடனுக்குக் குளிர் முதலிய துன்பம் நீக்கி,
உதவி செய்ய வேண்டும். வந்த விருந்தை ஓம்பா விட்டால், விருந்தினன்,
தன் பாவத்தை இல்வாழ்வானுக்குக் கொடுத்து, அவனது புண்ணியத்
தைக் கொண்டு போகிறான். ஆதலால், 'இவன் நம்முடைய பெண்டிரைப்
பிடித்தான்' என்னும் துக்கத்தை மனதில் வையாமல், இவனுக்கு இய
ன்ற மாத்திரம் பூஜிக்க வேண்டும்" என வேண்டியது. பெண்புறுவின்
வாக்கியத்தைக் கேட்டு, ஆண்புறு, "வேடா! உன் வரவு நல்வர வாகுக. நீ
மனதிற் சிறிதும் ஐய மில்லாமல், இதை உன் வீடாக நினைத்து வேண்டுவ
தைக்கேள்" என வினவி, "கபோதமே! என் குளிரைப் போக்கடி" என
வேண்டினான். கபோதம், காட்டில் இருந்து ஒரு கொள்ளி எடுத்துக் கொ
ண்டுவந்து சருகுகள்மேல் வைத்து மூட்டி, வேடனைப் பார்த்து, "நெருப்பு
மூண்டெரிகிறது. இதில் குளிர்காய். முன் தீவினையால் நான் பறவையா
யிருப்பதால் என்னண்டை உன் பசிக்கேற்ற பதார்த்த மில்லை. அநேக
துன்பங்கட்கு இடமாயும் பரோபகாரம் ஆகாமலும் இருக்கிற இச் சரீரத்
தை வைத்துக் கொண்டிருந்து பல னென்னை? இதனால் நீ உன் ஆத்மா
வை ஸந்துஷ்டி செய்" என்று சொல்லிக் கொண்டே, பரோபகாரம் கருதி
மூண்டெரிகிற அனலில் ஆனந்தத்தோடு விழ, வேடன், "ஆ! ஆ!! என் பொ
ருட்டு இஃது உடலைத் துறந்தது. நான் தீயொழுக்க முள்ளவன். வேறொ
ன்றின் தசையினால் ஜீவனம் பண்ணுகிறேன். பரோபகாரமும் தயையும்
சிறிதும் கனவிலும் அறியேன். ஆதலின் ஊனைத் தின்று ஊனைப் பெருக்
கிய பாவியாகிய நான் கோர நகரத்திற்குப் போவேன். இதை எனக்குத்

திருஷ்டாந்தமாய் இந்தப் புறா காண்பித்ததினால், இது முதலாக பசி தாகம் குளிர் வெயில் பொறுத்தல் இவற்றால் உடம்பை உலர்த்திப் பாவ மில்லாதவனாகக் கடவேன்" எனக்கூறி, பச்சாதாபத்துடனே தன் கூடு தடி கண்ணி முதலியவற்றை முறித்தெறிந்து விட்டு, அப் பெண் புறாவை விட்டு விட, அது, "உயிரினும் சிறந்த என் நாயகன், தருமத்தின் பொருட்டு உடலைக் கொடுத்தான். கணவன் கருத்துக்கு ஒப்ப நடப்பவளே உத்தமப் பெண்டு. என் கணவனது உடலுணவு அதிதிக்குப்போதிய தன்று. நானும் அவனுக்கு ஆகாரமானால்தான் அவனுக்குக் கால் வயிறாவது நிரம்பும்." என நினைத்து தானும் தீயில்விழுந்து இறந்தது. இறந்த உடனே அஃதொரு திவ்ய ஸ்திரீயாய்க் கணவனோடு ஸ்வர்க்கத்திற்குப் போயிற்று. இவை யாவும் கண்ட வேடன் இரக்கத்தால் பரிசுத்தனாய் நெருப்பில் தேகத்தைப் போட்டுவிட்டு நறகதியடைந்தான்" என்பதே.

ம. கோ.

கருணாகரத்தொண்டமான்.

"பண்டையொரு நாளிலே யொரேழ் கலிங்கப் பரணிகொண்டு
செண்டையு மேருவிற் றீட்டுவித்தோன்கழற் செம்பியன்செய்
தொண்டைநன் னாடுபுரக்கின்ற கோனாகித் தோன்றலெங்கள்
வண்டையர் கோனங் கருணா கரன் றொண்டைமண்டலமே"

—தொண்டைமண்டல சதகம்.

[பொழிப்புரை:—முன்னொரு காலத்து எழ்கலிங்கத்தின்மீது படையெடுத்துச் சென்று வென்று, (சயங்கொண்டாரால் புகழ்ந்துபாடப்பெற்ற) பரணிகொண்டு, செண்டை இமயமலையில் தீட்டியவனாகிய வீரக்கழலையணிந்த கரிகாலனால் நாற்பத்தெட்டுக் கோட்டங்களாக வகுக்கப்பெற்ற தொண்டைமண்டலத்தை ஆட்சி புரிந்த தலைவனாகிய நந்தித்தொண்டைமான் மரபில் வந்த வண்டைநகர்க் கதிபதியாகிய எமது கருணாகரத்தொண்டைமான் வாழ்ந்ததும் இத்தொண்டை மண்டலம்.]

இக்கருணாகரன் என்பவன், "பல்லவர் மரபினன்" என்பது 'நந்தித் தோன்றல்' என்பதனால் விளங்கக் கிடக்கின்றது. இவன் தன் போர்த்திறமையாலும், ராஜதந்திர சூழ்ச்சியாலும், தொண்டைநாட்டை ஆட்சிபுரிந்தமையின் "தொண்டைமான்" என்னும் பெயர் பெற்றனன் போலும். "மலைமான்" "ஈத்தமான்" என்பனபோல "தொண்டைமான்" என்பதும் ஓர் ஜாதிப் பெயரென்றும் கூறுப.) [illegible]

அலிக்கா தரங்கூர் புனிதன்மகிழ்ந்
தருள்வன் னியனையா மபுகழ்ச்
செவிக்கா ரமுத மெனக்கேட்டுச்
சிந்தை யுவந்து சீராக்கிப்
புவிக்கா யிரம்பொன் னிறைநீக்கிப்
பொற்றண் டிகையூ டனைத்தோடும்
கவிக்கா யிரம்பொன் பரிசளித்தான்
கருணா கரத்தொண்டை வன்னியனே''

—செம்பொற சிலை யெழுபது

"எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம்பரச்சம் பெறுநதமிழால்
பொறிக்கும் புலிக்கொடி யான்புகழ் பெற்ற புலமை யெல்லாம்
தரைக்கு மதனைப் புறத்தும் தெரிந்தெடுந் தன்மைகண்டேன்
மறைக்குவா லோதுங் கருணா கரத்தொண்டை வன்னியனே''

—கருணாகர வன்னியர் சதகம்.

எனவரும் செய்யுள்களால் அவன் வன்னிய மரபினனென்பது அறியப்படுகிறது. ஆகவே, கருணாகரன், பல்லவமரபினன் என்றும், பல்லவர்க்கு வன்னியரென்னும் பெயருண்டென்றும் யூகிக்க இடமுண்டாகிறது.

இக்கருணாகரத் தொண்டைமான், கி.பி.1070—1118வரை, கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, செவ்வனே ஆட்சிபுரிந்து, கீர்த்தியிற் சிறந்து 'உபயகுலோத்தமன்' 'அபயன்' 'அநபாயன்' 'சயதுங்கன்' 'ராஜேந்திரன்' '3-ஆம்கரிகாலன்' 'விஜயதரன்' எனப் பல விருதுப் பெயர்களோடு விளங்கிய முதலாம்குலோத்துங்க னுக்கு முக்கிய சேனாபதியும், முதல மந்திரியுமாக விளங்கினான். இவன் பிறந்த ஊர், "வண்டை நகர்'' என்பது, இவனை "வண்டையர்கோன்'' என்பதால் அறிக. இது வண்டலூர் அல்லது வந்தவாசியா யிருக்கலாமென யூகிக்கின்றனர் சிலர்.

இவன் குலோத்துங்கனுக்கு முக்கிய சேனாபதியாய் விளங்கிய காலத்தே கலிங்கத்தை வெல்லப் போர்க் கோலங் கொண்டு சென்று, வடகலிங்கத் தரசனாகிய வலிமை மிக்க "சோடகங்கனை''ச் சிறைப்படுத்தி, அவனதாயிரம் களிற்று யானைகளையும், உரிமையாகக்கொண்டு, ஜயஸ்தம்பம் நாட்டி, அவனதரும் பொருள் அனைத்தையுங் கவர்ந்து, குலோத்துங்கன்பாற்சேர்த்துச் சுதந்தர னென்று பெருமை பெற்றனன்.

"சானிரைத் தாலன்ன கணபனி தாங்கத கலைபிசைச்செங்
கர்னிரைத் தாரையுங் காணபன்கொல் லோகலிங் கத்துவெம்போர்
ந்நானிரைத் தார்தந்த மாலயா னைகள்பொன்னி நாடளவும்
வானிரைத் தான்றொண்டை மான்வண்டை மாநகர் மன்னவனே''

எனவரும் செய்யுளால் இது தெளிவாம்.

இவன் கலிங்கத்தைக் கொண்ட வெற்றியே கவிச்சக்கரவர்த்தி யாகிய "ஜயங்கொண்டார்" கலிங்கத்துப் பரணி, பாடி குலோத்துங்கனால் நன்கு சன்மானிக்கப் பெறுதற்குக் காரணமாயிருந்தது.

இனிக் கருணாகரன் கலிங்கம்வென்ற வரலாற்றைக் கவனிப்பாம். நேர்மையும், தீரமும் சிறக்க வாய்ந்த கங்கைகொண்ட சோழபுரத்தை மட்டுமன்றி

"மாடப் புகாருக்கும் வஞ்சிக்கும் காஞ்சிக்கும்
கூடற்கும் கோழிக்கும் கோமானாய்."

ஆட்சிபுரிந்தவனும், தந்தை வழியில் சாளுக்கியனும், தாய் வழியில் சோழனுமாகிய காரணத்தால், 'உபய குலோத்தமன்' என்றழைக்கப்படுபவனுமாகிய குலோத்துங்கன், பாலாற்றங்கரையில் பரிவேட்டையாட, யானை முதலிய சேனைகள் சூழ, காஞ்சிமாநகரடைந்து ஓர் சித்திர மண்டப சீதளப் பந்தரில், தியாகவல்லி, என்னும் தனதுதேவியுடன் தங்கித் திருவோலக்கங் கொண்டிருக்கையில், பலநாடுகளினின்றும் மன்னர் பலர்திறை கொணர்ந்து செலுத்தி, தனது ஏவல்வழி நிற்கத் 'திறைகொணராதார் எவரேனும் உளரோ?" எனவிசாரித்தான் விஜயதரன். அப்பொழுது வளமிக்க வடகலிங்க மன்னன், "சோடகங்கன்" இருமுறையாகத் திறைசெலுத்திலன் என்பது தெரிய வந்தது. குலோத்துங்கன், அவன் முன் தனக்கு எதிரியாக விருந்த வீரராஜேந்திரனுடன் சேர்ந்து தன்னுடன் பகைமை கொண்டிருந்ததையும், இப்பொழுதும், திறைசெலுத்தாது செருக்கடைந்திருப்பதையும் நினைந்து, சினந்து, அவனது யானைக்கூட்டங்களையும், பொருள்களையுங் கவர்ந்து, அவனையுஞ் சிறைப்படுத்திக் கொணருமாறு தம் சேனைத் தலைவருக்கு ஆணையிட்டான். அப்பொழுது

"இறை மொழிந்தளவி லெழு கலிங்கமவை
யெறிவ னென்றுகழ றொழுசனன்
மறை மொழிந்தபடி மரபின் வந்தகுல
திலகன வண்டைநக ரரசனே"—கலிங்கத்துப்பரணி.

கலிங்கத்தின் மீது போர்க்கெழுந்த இவ் "வீரன், பாலாறு, குசைத்தலை, சுவர்ணமுகரி, கொல்லி" என்னும் நாலாற்றையுங்கடந்து பெண்ணையாற்றையுந் தாண்டிச் சென்றனன். பின் வயலாறும் மண்ணாறும் குன்றியும், கிருட்டிணையும், கோதாவரி, பம்பாநதி, கோதமை முதலியவும் இப்பாலாக அப்பாற் சென்று * கலிங்கஞ்சேர்ந்து கடும்போர் புரிந்தனன். இதற்கு

* இது இப்போது வடசர்க்கார் என்னும் பிரதேசத்தில் கோதாவரி நதிக்கு அப்பாற் பட்டது. தற்காலம் விசாகப்பட்டணத்துக் கருகில் உள்ள தோர் நகரம் 'கலிங்கபட்டணம்' என வழங்குவதும் இதனை நன்கு வற்புறுத்தும்.

ஆற்றாத கலிங்க வீரர், தமது ஆயிரம் மதயானைகளையும், யுத்த தளவாடங்களையுந் தோற்று முதுகிட்டோடினர். அபயன் சேனைகள், அவர்களது யானை, குதிரை, தேர், ஒட்டகம், நிதி, பெண்டிர் முதலிய யாவையுங் கைப்பற்றி, ஆரவாரித்தனர். கரந்தோடிய சோடகங்கனைத் தேடிச் சிறை செய்து கொணருவதற்கான சூழ்ச்சி புரிந்து அவனையுங் கைப்பற்றிக் காவல் செய்தனர் அபயனது வீரர். சிறைப்பட்டவரும் தோற்றோடியவரும் இறந்தவரும் கணக்கிலராவர். சுருங்கக் கூறுமிடத்துக் கலிங்கத் தோவியர் சுவர்களில் எழுதி வைத்த உருவங்கள் தவிர கலிங்கநாட்டில் வேறு உருவமில்லை. இங்ஙனம்,

> "கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
> கடகரியுங் குவிதனமுங் கவர்ந்து தெய்வச்
> சுடர்ப்படைவா ளபயனடி யருளினேனென் —
> சூடினன் வண்டையர் கோன் தொண்டைமானே"
> —(கலிங்கப்பரணி)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

சாணக்கிய ஸாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

ஐந்தாவது அத்தியாயம்.

காவலாளிகட்கு எச்சரிக்கை.

சூரியோதயம் ஆயிற்று. சாணக்யன் எழுந்திருந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு, சேகரனை வரவழைத்து, "ஐயா! சேனாபதியே! நீ ஸகல சேனைகளையும் அழைத்துக்கொண்டு பிராகாரங்களை இடித்து வீழ்த்தக்கூடிய பீரங்கிகளைப் பட்டணத்தின் நாலுபுறங்களிலும் நிறுத்து. கோட்டை மதில் மீது 'லங்கர்' ஏற்றக்கூடிய தைரியசாலிகளைச் சித்தப்படுத்திப் பட்டணத்தை முற்றுகையிடு. கோட்டைகள் மீது குண்டுகளை இறைத்து அங்குள்ள காவலர்களுக்கு,

"சந்திரகுப்த மஹாராஜாவானவர் சத்துருக்களான நந்தர்களை ஸம்ஹரித்து ஜயமடைந்திருப்பதாலும், முறைமையாலும் இவ்வரசாட்சிக்கு உரியவராக இருக்கிறார். நீங்கள் வீணில உபேக்ஷையாலும்

தடுக்காதும் பிராணனை இழக்காதேயுங்கள்; உடனே புத்திர பந்து ஸமேதர்களாக நேரில் வந்து ராஜாக்கினைக் குட்பட்டுப் பிரபுவின் மனத்திற்கு அனுசாரணையாக நடந்து கொள்ளுங்கள்; அப்பொழுது தான் நீங்கள் முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிகச் செல்வாக்கு டனும் சௌக்கியத்துடனும் இருக்கலாம். இவ் எண்ணம் உங்களுக்கு உண்மையில் இருந்தால் கோட்டை கொததளங்கள், பொக்கிஷங்கள் இவற்றின் திறவுகோல்களை உடனே ஒப்புவிக்கவேண்டியது''

என்றுசொல்லி யனுப்பு. ஒருக்கால் ராக்ஷஸனது தர்ப்போதனையால் காலதாமதம் ஆகுமாயின், அப்பொழுது தக்க உபாயங்களால் பட்டணத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளலாம்'' என்று சொன்னான்.

அதுகேட்டுச் சேகரன் ''உத்தரவு'' என்று சாணக்யனது சொற்படியே பாடலீபுரத்தை முற்றுகையிட்டு ஜயபேரிகை முழக்கினான். இவ்வொலி கேட்டதும், நகரத்திலுள்ள ஜனங்களெல்லாரும் பீதியால பிரமிப் படைந்தார்கள். அப்பொழுது பாகுராயணன் தன் அருகிலிருக்கும் தூதர்களை யழைத்து, ''நீங்கள் பர்வதராஜ சேனபதியான சேகரனைக் கண்டு, இவ்விதம் சொல்லி வாருங்கள்'' என்று ஏதோ சொலலியனுப்பினன. அவர்கள் சென்று சேகரனைக் கண்டு கும்பிட்டு, ஸ்வாமி! ஸேனாபதியே! நகரை ரக்ஷித்துக் கொண்டிருக்கும் சேனாபதியான பாகுராயணர் தங்களைக் கண்டு 'நந்தர்களுக்குப் பின் இந்நகரத்தில் உங்களுக்குச் சத்துருக்கள் ஒருவருமில்லை. ராஜ முத்திரையையும கோட்டைப் பொக்கிஷத் திறவு கோல்களையு மெடுத்துக் கொண்டு சந்திரகுப்த மஹா ராஜாவைக் கண்டு கொள்ளும் நிமித்தம் இப்பொழுதே நாங்கள் எல்லோரும் வரப்போகிறோம். இனி யுத்தம் செய்யவேண்டிய காரணம் சற்றுமே இல்லை' என்று தெரிவித்து வரச் சொன்னார்'' என்றனர்.

அது கேட்ட சேகரன் ''தூதர்களே! ஊர்க் காவலர்களின் மனதை அறியும்படி எங்கள் பிரபுவின் கட்டளையை அனுசரித்து முற்றுகையிட் டிருக்கிறோம். இப்போது முத்திரையை ஒப்புவித்தால் யுதத பிரயத்தனத்தை நிறுத்தி விடத் தடையில்லை சீக்கிரம் வந்து சேரும்படி பாகுராயணனிடம் சொல்லுங்கள்'' என்றான். தூதர்கள் திரும்பி வந்து, இச சமாசாரத்தைப் பாகுராயணனிடம் தெரிவித்தார்கள்.

ஆறாவது அத்தியாயம்
ஸித்தார்த்தகனது யோசனை.

பாகுராயணன் பொக்கிஷ அதிகாரியான ருக்மன் முதலிய முக்கிய அதிகாரிகளனைவர்களையும், வரவழைத்துப் புதிய அரசனைக் காண வேண்டியதற்குரிய சகல வஸ்துக்களையும் சித்தப் படுத்திக் கொண்டு, புறப்படத் தயாராய் இருந்தான். இச்சமயத்தில், ஸித்தார்த்தகன் அவ்விடம் வந்து, பாகுராயணனைக் கண்டு "என்ன ஐயா! க்ஷேமமா? என்றான்.

"ஐயா! புத்திமானாகிய ஸித்தார்த்தக! நீ சொன்ன விஷயங்களெல்லாம் வித்தியடைந்து அநுபவத்திற்கு வந்து விட்டதால் 'ஸித்தார்த்தகன்' என்ற பெயர் உனக்கு தகும்! தகும்! நாங்கள் யாவரும் சந்திரகுப்தனைக் காணும் பொருட்டுப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம்" என்று பாகுராயணன் சொன்னான்.

ஸித்தார்த்தகன் அது கேட்டுப் பாகுராயணனைத் தனியில் அழைத்து, "ஐயா சேனாபதியே! இப்பொழுது நீ நேராகச் சென்று சந்திரகுப்தனைக் காண வேண்டிய அவசியமில்லை. இதனால் சந்திரகுப்தன் உன்னைக் கோபிக்க மாட்டான், ஏதோ நீ அவன் காரிய நிமித்தமாகவே தாமதிக்கிறாய் என்றும், பின்னால் நீ வருவாய் என்றும் அறிந்து, உன்னிடம் அதிக விசுவாசம் கொள்வானே அல்லாது வேறு வித்தியாசமாக எண்ணான். இப்பொழுது உனக்குத் தம்பியான வத்ஸலாயனன் கையில் ராஜ முத்திரையை அனுப்பிவிடு. இவ்விதமே உனக்கு மித்திரர்களான பத்ரபடாதி சேனாபதிகளையும் நிறுத்திவிட்டு, வேறு மனிதர்களை அவர்களுக்குப் பதிலாகவும் அனுப்பிவிடு. காரணம் இப்பொழுது கேட்காதே." என்றான்.

இது கேட்டுப் பாகுராயணன் "ஏதோ இனி நடக்க வேண்டிய பெருத்த காரியத்தின நிமித்தமே ஸித்தார்த்தகன் இவ்வாறு சொல்லுகிறான். இவன் வார்த்தை பிரயோஜன மற்றதாயிராது" என்று உணர்ந்து, "அப்படியே ஆகட்டும்" என்று தன் தம்பியான வத்ஸலாயனனை அழைத்து, சகல ஸாமான்களையும் அவனிடம் கொடுத்து, "நீ ருக்மன் முதலிய முக்ய அதிகாரிகளுடன் சென்று சந்திரகுப்த மஹாராஜாவைக் கண்டு திறவுகோல்களையும் முத்திரையையும் ஒப்புவித்து, 'உத்தரவுப் பிரகாரமே நடந்து கொள்கிறோம்' என்று தெரிவித்து அங்கு இருக்க வேண்டியது" என்று அனுப்பினான்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

சிறுவர்க்காகும் கதைப்பூங் கொத்து.

(57-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கதை—21.

தோற்றங் கண்டு துணியலாகாது.

ஒருத்தி ஒரு கிளியும், பூனையும் அதிக பிரேமையுடன் வளர்த்து வந்தாள். அவளது செல்வக் கிளி அவளது ஆசனத்தில் உட்காரும். கையில் கூத்தாடும். கையிலிருந்து ஆகாரங்களைத் தாராளமாய்த் தின்னும். பூனையும், அக்கிளியைச் சகோதரன் போலவே பாவித்து வந்தது. ஒருநாள் கிளியுங் கையுமாய், (தன் பின் பூனை வர) அவள் சமையலறை சென்றாள். அப்பொழுது, அங்கு தரையிற்கிடந்த ஆகாரத்தைக் கொத்த எண்ணிக் கிளி கீழே இறங்கியது. உடனே, பூனை அதனை வாயிற் கௌவிக் கொண்டு ஓடிற்று. அது கண்ட ஸ்திரீ மிகவும் நடுங்கினாள். ஆனால் மறுநிமிஷமே அவளது பயம் தீர்ந்தது. ஏனெனில், "மற்றொரு பூனை, கிளியின் மேல் பாயத் தயாராயிருந்ததால், அப்பூனை அதைக் கௌவி ஓடியது" என்ற உண்மை அவளுக்குத் தெரிய வந்தது. பிடிக்க வந்த பூனை ஓடியதும், சிநேகப் பூனை கிளியைக் கீழே விட்டது. கிளி எஜமானி கைக்குச் சென்றது. அவளுக் கிருந்த சந்தோஷத்தில் பூனையை நன்றாய்ப் போஷித்தாள் என்று சொல்லவும் வேண்டுமோ?.

கதை—22.

இச்சக மொழிகளை நச்சலாகாது.

பசியால் வருந்திய நரியொன்று ஆகாரத்திற்காக அலைந்து திரிந்து ஒரு மரத்தடி சென்றது. அச் சமயம், ஒருகாகம் எங்கிருந்தோ மாம்சத்துண்டைக் கௌவிக் கொண்டு மரக்கிளையில் உட்கார்ந்திருந்தது. அது கண்ட நரி, தனக்குள், "இக் காகத்தின் வாயிலிருக்கும் மாம்சம் நல்லதாகத் தோன்றுகிறது. இம் மூடக்காக்கையைத் தோத்திரம் செய்து அதைக் கைக் கொள்ளுவேன்" என நினைத்துக் காக்கையை நோக்கி, "ஏ! காக்கையே! பக்ஷிகளுள் நீதான் பிரகாசிக்கக் கூடிய குணங்களுடையவன். உன்னுடைய அழகை ஆதிசேஷன் தனது ஆயிரம் நாவாலும் வர்ணிக்கமுடியாது. ராகமோ, குயிலும் வெட்கி நின்றுவிடும். உன்போன்றோர் ராகத்தை நான் மாதமிருமுறை கேட்பது வழக்கம். இப்பொழுதும் கேட்க விரும்புகிறேன். ஆதலால் நீ சிறிது பாடுவாயா?" என்றது. அது கேட்டுத் தன் நிலைமை யறியாத மூடக் காகம் பாட வாய்திறந்தது. திறக்கவே, வாயிலிருந்த துண்டம் கீழே விழ, அதை நரி எடுத்து மிகவும் சந்தோஷத்துடன் தின்றது. பேதைக்காக்கை ஏமாந்தது.

வி. கு. நடராஜன்.

அ. நாராயண ரெட்டியார் மீது

இரங்கற்பாக்கள்

எனதரிய மாணவ! இரட்டிகுல மும்தமிழும் இலகு மாறு
கனியொளிர்சீர் அழகியநல்லூர்க்கணியாய் அவதரித்தோய்! நலமிக்கார்ந்த
புனிதமிகு புகழ அழகர் ரெட்டி திருத் தவப்புதல்வ! புலியோர் போற்றும்
இனியகுண! நாராயணப்பெயரோய்! எமைநீங்கி எங்குற்றாய் நீ? 1

பல்விதநன் னலம்புரியும் பைந்தமிழ்த்தாய பரிதவிக்கப் பலரும் ஏங்கி
வல்விதனக் கடலாழச் சென்றனை நாராயணா!நீ. வையத் தேயாம்
கல்விதனம் ஆதியபல் சீர்பெறுவேம் எனினும், உனக் கனிவி னோடும்
ஒல்விதநல் லுதவிபுரி உனைப்பெறுதல் எமக்காமோ? உரைத்திடாயே! 2

எல்லவரும் எத்திசைகொள் நின்தக்கை நினதுநிலைக் கிரங்குங் காலை
,"அல்லனபோல் ஆவனவும் உண்டு சில; ஆதலினா நீ அஞ்சேல். ஆர் என்
சொல்லினும் என்? இன்றுமுதற் சுகமாகும், நாளைமுதற் சுகமா கும்பார்
நல்லவன் நீ.நின்மகனும் நல்லவனாம்.நம்பு" கென நவின்றிட் டேனே! 3

தாயிழந்த நினதுநலம் கருதிமணம் முடியாநின் தந்தை ஏங்க,
'நீயிறந்தாய்' எனக்கேட்ட நிமிடமே வருந்தி முன்என் நேயம் மிக்க
சேயிறந்த துயரினுமீத் துயருழந்தேன், மதி இழந்தேன்,தெளிவுசான்ற
வாயிழந்தேன். என் செய்வேன்! நாராயணா!இங்கு வந்திடாயோ? 4

பரிந்தெனைநீ வரவழைத்தென் பதம்சூடி "ஐயா! என் பாவம் யாவும்
இரிந்திடஎற் கருளுதியேல் அமைதியொடென் உயிர்பிரியும்" என்றபோது,
வருந்தலை.நீ பாவியிலை.இனும் பன்னாள் சுகமாக வாழ்"கென்றேன்.யாம்
அரற்றுறப் பிரிந்திடுதல் அழகோநாராயணா! நீ அறைகு வாயே.! 5

எனதுரிமை 'மாணவர்செந் தமிழ்ச் சங்கந்' தனிற் சேர்ந்தும்,என்பாற்கற்
உனதறிவு மிக, என் நாராயணா! நீ அவவுண்மை ஓர்ந்தே ஐய! [றும்,
நினது சிறு அழகிய நல்லூரிலொரு தமிழ்ச்சங்கம் நிறுவி, மற்றென்
றனதுபெய ராலேஓர் பத்திரிகா சாலையும் நீ தாபித் தாயே! 6

நின்னுயிர்போம் சின்னாள்முன் நினையான்றேன் தனை அழைத்து,"நீ எற்காக
மனம் வருந்தேல், யான் இனிமால் பதமுறுவேன். எனைப் பிரிந்து
[வாழாய் பன்னாள்.
புனிதமிகு தமிழ் வளர்க்கும் புண்ணியமே புண்ணியம். நின பொருளிற்
எனதுகுரு பிரமஸ்ரீ கோபால கிருஷ்ணையர்க் கீந்து" என்ன, [கொஞ்சம்

அருமைவிருந் திதுதேட்ட யான்அழுது, "மாணவ! நின் அன்பே எற்குத்
தருமிதியம், நின்பொருளேன்?" எனச்சொல, "நீ பெறுவன, நின்
'சங்கத்திற்கே
உரியனவாக் குவைவளனென் உளமறியும், எனச்செற்றேன் உண்மையாரும்
தெரியவுரைத் தென்மீதும் தமிழ்மீதும் உளஅன்பைத் தெரிவித்தாயே! 8

நீரத்தர அக் ராஸகனு நினது சபைக் கெனைஆக்கி, நிலவிநாளும்
உரர்தருமச சபையினைஎன் சங்கத்தின் கிளையாக்கி உவகை பூத்தோய்!
பரந்தருமால் பதமலர்கீ.தருவாரத் தன்றற்ற பண்பே சாலும்,
திரந்தரு நின் குருபக்தி யினைவிளக்க.மெய்யன்றோ? தென்னி யோனே! 9

என் 'மதுரை மாணவர்செய் தமிழ்ச்சங்க'த் திற்கேதோ ஈயமாநீ
நன்மையிரு நின்தக்கைக் குரைத்ததோடும் நில்லாமல், நலமே செய்யும்
'தன்மதுரை நம்பாண்டித் துரைச்சங்கத் திற்குமெதோ தருக' என்ற
தன்மையையென் என்பேன்! நா ராயணனே! தமிழ்வளர்க்கும் தகைமை
யோனே!10

நினதுபிரி வாற்றாது சொரந்தழுத எனைத்தேற்ற நினது தந்தை
"எனது மகன் பாவியலன். புனிதன். அவன் இறந்திலன். நீ எங்கள்ஐய!
உனதுளமும் எனதுளமும் மற்றுமிவண் உளஎல்லோ ருளமும்உற்றங்(கு)
இனிதுறைவன்" என உரைத்தும், இறையளவும் ஆறுதலே எய்திலேனே

இறைவன்விரும் பியநல்லோர் இளமையிலே இகம்நீப்பர்' என்னமேலோர்
அறைதருநன் மொழிக்கிசைய ஆண்டொருமூன் றெட்டினில்நீ அவனிநீங்கி
மறைவுறினின் றுயெனினும் நினதுபுகழ் உடம்பென்றும் மறைவுறாது.
நிறைபுகழ்நின் சங்கமுநன் முயற்சிகளும் நீடூழி நிலவி வாழி! 12

ம. கோபாலகிருஷ்ணையர்.

II

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

தடங்கட லுலகின் மடமைநோ யகன்று
தக்கமெய்ஞ் ஞானமே லோங்க,
நெடுந்தமிழ் மொழியின் நிலமிசை விளங்க,
நிலவு"செந் தமிழ்க்கலா சபை"யைத்
திடம்படு மீசொன் பான்பரு வத்துச்
செழிப்புற நிறுவிய திறல்சேர்
மடங்கலே றனையாய்! இனியெவர் அளிப்பார்?
வானகம் புக்கனை மறந்தே! (க)

சிந்தையி னென்றும் செந்தமிழ்ச் சங்கம்
செழிப்புற வளர்த்ததே கருதித்
தந்தையுந் தாயு மோருரு வெடுத்த
தன்மையிற் புரந்தனை பெரியோய்!
எந்தையே! யெழில்நா ராயணப் பெயரோய்!
இம்பர்நீத் தும்பர்நா டடைந்தாய்!
வந்தினி யெவரே நினதுசங் கத்தை
மாணுறப் புரிந்திடு நீரார்? (உ)

நின்னையீன் றினிதின் வளர்த்தநீ ணிலத்தில்
நிகரெவ ரெனப்பல கலைகலையும்
மன்னவே பயிற்றி நின்னையா ருயிராய்
மதித்தநின் அன்புறு தந்தைக்
கென்னையே தஞ்சம்? இரங்குதல் சிறிதும்
இன்றியே யத்தகு தாதை
தன்னைநீத் தகல்வான் பொன்னுல கடைந்தாய்!
தக்கதோ? சாற்றுதி தகவோய்! (௩)

தந்தைதன் மகனுக் காற்றிடு முதவி
சபையின்முன் திருந்திடப் புரிதல்;
மைந்தனுக் கவனுக் கியற்றிடு முதவி
"மாணுறு மிவன்றந்தை புரிந்த
விந்தைசேர் தவம்யா, தெனுமொழி நிறுவல்
வேண்டு"மென் றனர்; அவைக் கிணங்கத்
தந்தையும் நீயுஞ் சாதிப்பக் கண்டேன்
சடக்கென நீபிரிந் தனையே! (௪)

செந்தமிழ்ப் புலமை யந்தணர் பெருமான்
திறல்கொள்தாய் மொழியினை வளர்க்கும்
சிந்தைசேர் எம்.கோ பாலக்ருஷ்ணைய
தேசிக னார்சமு கத்தே
அந்தமிழ்க் கலைக ளாய்ந்தொளிர் நாரா
யணப்பெய ரமைந்தவா ரமுதே!
இந்தநீ ணிலம்விட் டேகினை, எவரே
இனியெமக் கரியன பகர்வார்? (௫)

நாளொரு வண்ணம் பொழுதொரு மேனி
    நானிலத் தோர் நனிமெச்ச
வேலென வளர்ந்தாண் டீரொன்பான் வரையும்
    விளங்கினை. அதனின் மேற் பிணிகொள்
கோளரி யெனநீ குறைந்துமுற் றாய்தல்
    குறைவற முயன்றனை கோவே!
வாளமர்ப் பட்ட காளையை நிகர்ப்ப
    மாண்டனை யே!மழ களிறே! (௬)

இந்நிலத் துள்ள பண்டிதர் மருந்தால்
    இப்பிணி விரைவினி லகலா
தென்னவா னடைந்தவ் வானவர் மருந்தை
    யினிதினுண் டேமுறல் நினைந்தோ
பொன்னுல கடைந்தாய்? புந்தியா லுயர்ந்த
    புலவர்தம் புனிதபூ டணமே!
மன்னவே இனிநிற் கண்டுநின் மதுர
    வாசகங் கேட்பதெந் நாளே! (௭)

வாயினிற் பொய்யுங் கையினிற் கரவும்
    மறந்து,சத் தியம்அற மிரண்டில்
நேயமுற் றிருந்தாய்! நிருபனே; நினக்கு
    நிகரெவ ராகுவ ரையா?
தாயினைச் சிறுபோ திழந்தும்நின் நிகரில்
    தாதையால் அனைத்தையும் பெற்றாய்.
நோயினைக் கூற்றைக் கடக்குமாற் றலினை
    தனித்துணை யாதவா றென்னே? (௮)

ஆண்டினி லிளையை அறிவினாற் பெரியை
    யாகியீ ரொன்பது வயதில்
வேண்டிய போதம் விளங்கிடப் பெற்ற
    மேதையோய்! பிணியினால் வருந்திப்
பூண்டமூ வெட்டாம் பருவம்வந் துறவே
    பொன்னுல கின்பினைப் புக்காய்
காண்டகு தமிழ்த்தாய்க் குரியமா மகனே
    காத்தருள் பவரினி யெவரே? (௯)

புவிமிசைக் கொல்லா விரதமும் ஆதனாற்
புலால்மறுத் தலிற்புல மையும்வாய்
கவிஞர்மா மணியே! கலைகொள்வா ரிதியே!
கருதுநா ராயண முகிலே!
நவமுறு மிரெட்டி குலமலை விளக்காய்
ஞானகு ரியனென வருமா
தவவரோ தயனே! எம்மைநீத் துயர்வின்
சார்ந்தனை யறமிதோ பகராய்! (௧0)

பிணிகொளிவ் வுடம்பை விடுத்தவே றுடம்பு
பெற்றுமீ ளவும்வரு குவலென்
துணிவுகொண் டோநீ சுவர்க்கநா டடைந்தாய்?
'தூயபுல் லாணிநா யகனுக்
கணிகலம் பகமொன் றுக்குதி' எனநீ
அளியனேற் கியம்பினை. அந்தப
பணிமுடி வுறுமுன் பரிந்துமால் மலர்த்தாள்
பற்றினை பற்றெமக் கியாதே? (௧௧)

பொய்யுடம் பதனை விடுத்துமெய் யுடம்பாம்
புகழுடம் பெய்திவாழ் வதுவே
உய்யுநன் னிலையென் றுணர்ந்துபுன் னுடம்பை
யொழித்தனை போலுமெம் பெரும!
துய்யநா ராய ணப்பெயர்த் தோன்றால்!
சுந்தர னளினமின் சமுகம்
வையக மிசையாங் கண்டுகண் களித்துன்
வாசகங் கேட்குநா ளுளவே? (௧௨)

தி. அ. வேங்கடசாமி ரெட்டியார்,
உப-அக்கிராசனாதிபதி,
செந்தமிழ்க் கலாசபை, கு. அழகியநல்லூர்.

துருவ சரித்திரம்.

சுவாயம்புவ மனுவுக்குப் பிரிய விரதன், உத்தானபாதனென்று இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களில் உத்தானபாதனுக்குச் சுநீதி, சுருசி, என்று இரண்டு மனைவியர்கள் உண்டு. சுநீதியென்ற மூத்த பத்தினிக்கு சகல குணாபிராமனான துருவன் என்றொரு பிள்ளையும், சுருசியாகிய இளையாளுக்கு, உத்தமனென்று ஓர்

புத்திரனும் உண்டானார்கள். ஒரு நாள், சுருசியின் புதல்வனாகிய உத்தமன், சிங்காதனத்தில் வீற்றிருந்த தன் பிதாவாகிய உத்தானபாத ராஜனுடைய தொடையி லுட்கார்ந்து கொண்டிருக்கையில், தந்தை தாயாரிருவரும், அக் குழந்தையின் யாழினு மினிய மழலைச் சொற்களைக் கேட்டுப் பரமானந்த மடைந்தனர். அப்போது துருவன் தன் தந்தையின் ஊருவில் தானுஞ்சென் றிருத்தல் வேண்டுமென்று அவாக்கொண்டு, பிதா வீற்றிருந்த சிம்மாஸனத்தை அணுகினான். இதைக் கண்ட சுருசி, மிகப் பொறாமையுற்று, துருவனது கரத்தைப் பிடித்து இழுத்துப் புறத்தில் கெட்டித் தள்ளி, அச்சிறு குழந்தையைப் பார்த்து, "அடா துருவா! வேறொரு மனைவியின் வயிற்றிற் பிறந்து, இந்தத் தந்தையின் தொடையி லுட்கார விருதாவாக எத்தனிக்கின்றாயே! உன் மனோரதம் ஒருக்காலும் நிறைவேறாது. என் வயிற்றிற் பிறந்த குமாரனாகிய உத்தமனுக்குத்தான் இச்சிங்காதனமும் உன் தகப்பனது தொடையும் தகுதி. சுநீதி வயிற்றிற்பிறந்த உனக்கு அவை தகுதியல்ல. நீ இந்த மகிபாலனுக்கு மகனேயாயினும், சிம்மாஸனத்திற்கு அருகனல்லன்" என்றாள்.

தன் சிற்றன்னையின் மொழிகேட்டதும், துருவராஜன், சரேலென்று எழுந்து, தனது மாதாவாகிய சுநீதி யிருக்கும் இடத்துக்கு விரைந்தோடி, அவளெதிரில், கோபத்தால் கண்கள் கோவைக் கனி போற் சிவந்து, வார்த்தை சொல்ல நாவெழாமல் உதடு படபடவென்று துடிக்க, தாரைதாரையாய்க் கண்ணீர் பெருக அழுதுகொண்டு நின்றனன். இவ் வண்ணம் நிற்கும் தன்னருமைப் புதல்வனைச் சுநீதி கண்டு, அருகிலுற்று, மனமிக நொந்து, அவனை மடியி லுட்கார வைத்துக்கொண்டு, "அடா மதலாய்! என் கண்மணியே! யார் இப்படி உனக்கு அபராதம் செய்து உலகாளும் உன் தகப்பனை அவமானஞ் செய்தனர்?" என்று கேட்க, துருவன், "அன்னாய்! எனது பிதா அரியணைமீ திருந்தகாலையில், என் சிறிய தாயாகிய சுருசி, உத்தமனை அழைத்துக்கொண்டு போய்விட, அவர் அவனைக் கட்டி வாரித் தழுவி, முத்தமிட்டு உச்சிமுகந்து தம்முடைய தொடைமீது எடுத்து வைத்துக் கொண்டு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கக் கண்டேன். நானும் அவர் மடியி லுட்கார வேண்டுமென்று விரும்பி, சிம்மாஸனத்தை அணுக, வேந்தனது அருகிலிருந்த ஸபத்நி மாதாவான

சுருசி,எனது காத்தைப்பற்றி யீர்த்து,புறத்திற்றள்ளி, தனது குமாரனுகிய 'உத்தமனுக்குத்தான் அர்தத் தொடையுஞ் சிம்மாஸனமும் யோக்கியமே யன்றி அவைகட்கு நான் அருகனில்லை' யென்றாள்'' என்று கூறி விம்மியழுதான்.

தன் புத்திரன் பேச்சைக் கேட்டதும் பெருமூச்சுவிட்டுச் சுநீதி, ''அப்பா குழந்தாய்! சுருசி சொன்ன வார்த்தை மெய்யே. சுருசி பாக்கியசாலி. அவள் பூர்வ ஜன்மத்திற் செய்த பூஜாபலத்தினுல் உன் பிதாவாகிய உததானபாதராஜன் அவளிடத்தில் பிரியமாயிருக்கின்றார். நான் ஜன்மாந்தரத்தில் புண்ணியஞ் செய்யாததால் அவர் என்னிடத்தில் அன்பு வைக்கவில்லை. பாக்கிய ஹீனியா யிருக்கப்பட்ட என்வயிற்றில் நீ பிறந்தபடியால் உனக்கு யாதொரு சௌக்கியமும் இல்லாமற் போய்விட்டது. சுருசி புத்திரனுகிய உத்தமனுக்கு முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயனுக்குத் தக்கபடி கடவுள் சகல வைபவத்தையுங் கொடுத்திருக்கிறார். ஒருவருடைய பூர்வ ஜன்ம பலத்தை அபகரிக்க யாராலே யாகும்? ஆகையால் மனக் கிலேசத்தை விட்டுவிடு. பூர்வஜன்ம சுகிர்தத்தால் புருஷர்கள் பாக்கியசாலிகளாகப் பிறந்து மகா ராஜயோகத்தை யடைகிறார்கள். குழந்தாய்! நாம் உள்ளதைக் கொண்டு திருப்தி அடைந்து ஸந்துஷ்டர்களாயிருக்க வேண்டும்'' என்றாள்.

மாதாவின் வாக்கியத்தைக் கேட்டுத் துருவன், அம்மா! நீர் சொல்லிய வார்த்தை என் மனதிற் பதியவில்லை. ஏனெனில், உத்தானபாதன் உத்தமனுக்கும் எவ்வாறு தகப்பனே, அப்படியே எனக்கும் பிதாவாயிருக்க, நான் மாத்திரம் அவர் தொடையில் உட்கார அருகனில்லை யென்று சொல்வது ஆச்சரியத்தினு மாச்சரியம்! நல்லது; தர்மாத்மாவாயும், ஸர்வபூத தயாபராயும் குணக்ராஹியும் இருந்தால், நாம் செய்யும் பூஜாபலனுக்குத் தக்கபடி கடவுள் நமக்கு நல்லபதவியைக் கொடுப்பதாகச் சொன்னீரே. என் தகப்பனது சிம்மாஸனத்திற்கும் தொடைக்கும உத்தமனே யருகனுயிருக்கட்டும். ஸகலலோக பாலகனும் சச்சிதானந்த சொருபியுமாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் அனுக்கிரகத்துக்கு நான் பாத்திரமாகி,எந்த ஸ்தானமானது பிரமாதிகளாலும் அடைய முடியாதோ அப்படிப்பட்ட உயர்ந்த பதவியை அடைகிறேன்'' என்று தன் தாயி

னிடம் சொல்லிவிட்டு, கிழக்குத்திசையை நோக்கி வனத்திற்குப் புறப்பட்டான். இதைக்கண்ட சுநீதி மனம் வருந்துவாளாகி, "அப்பா மகனே! நீ ஐந்து வயதுள்ள பாலனன்றோ? இன்னும் பால்குடி முழுதும் மறக்கவில்லையே! உனது மழலைச் சொல் இன்னும் மாறவில்லையே. யானை, புலி, சிங்கம், முதலியன, வாழாநின்ற கானகத்தை நீ யெவ்வாறு கடந்து செல்வாய்?" என்று வருந்த, துருவன் "எல்லா வரங்களையுஞ் சகல ஐசுவரியங்களையும் மோக்ஷ ஸாம்ராச்சியத்தையும் தந்தருளவல்ல ஜகதீசனொருவன் இருக்க, யான் பயந்தோன்றாக்கும் அஞ்சேன்" என்று அவளை சமாதானஞ் செய்து, அப் பட்டணத்திற்குச் சமீபத்திலுள்ள ஓர் உபவனத்தில் நுழைந்தான்.

அவ்வனத்தில் கிருஷ்ணாஜினம், மரவுரி முதலிய தரித்து வீற்றிருந்த ஏழு மகரிஷிகளைக் கண்டு நமஸ்கரித்து, மிக விநயத்தோடு "முனீசுவரர்களே! நான் உத்தானபாதனுடைய குமாரன்; என் தாயின் பெயர் சுநீதி; என் நாமதேயம் துருவனென்று சொல்லுவார்கள்" என்றான். அம்மகரிஷிகள் துருவனை நோக்கி, "அப்பா குழந்தாய்! ஐந்து பிராயமுள்ள பால்குடி மறவாத உனக்குக் கொடிய மிருகங்கள் வாழும் இக்காட்டிற்கு வரும்படி வைராக்கியம் நேரிட்டது யாது காரணத்தால்?" என்று வினவினர். அதற்கவன், "எனது தந்தை சிங்காதனத்தில் வீற்றிருக்குங்கால் அவரது மடியில் உட்காரும் அவாக்கொண்டு நான் அரியணையை அணுக, சமீபத்திலிருந்த என் சிறிய தாயாகிய சுருசி என்னைப்பிடித்துப் புறக்கே தள்ளி, நான் என் பிதாவின் தொடையிலுட்கார அருகனில்லை யென்று சொன்னாள். அதனை எனது தாயாரிடஞ்சொல்ல, அவள் பூர்வ ஜன்மத்தில் ஒருவன் செய்த புண்ணியத்திற்குத் தக்கபடி இந்த ஜன்மத்தில் சௌக்கிய மனுபவிப்பதாகவும், ஸர்வலோகைக நாயகனை ஸ்ரீ கோவிந்தனை ஆராதிப்பவர்களுக்கு மேலான பதவி கிடைக்குமென்றும், உரைத்தபடியால், நான் சாசுவதமான பதவி அடையும் பொருட்டு வந்தேன்" என்று சொன்னான் இதைக்கேட்டு முனிவர்கள் ஆச்சரியமடைந்து, "இவன் சிறுகுழந்தையாயிருந்த போதிலும் க்ஷத்திரியனானதால் ரோஷமும் வயிராக்கியமும் உடையவனாய், தனது சிற்றன்னையின் வார்த்தையைச் சகிக்காமல் வந்திருக்கிறான். அடா! என்ன ஆச்சரியம்! இவனுக்குக் கடவுள் அனுக்கிரகம் உண்டாகும்" என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

(இன்னும் வரும்.)

சி. நாராயணசாமி ஐயர் B. A. L. T.

கமலாவதி.

அங்கம்—4.
காட்சி—3.

இடம்.—கொரேசேனனது அரண்மனையிலோர் அந்தரங்க அறை.
காலம்.—காலை.

கம. (தனக்குள்) அப்பா! இக கஷ்டங்களை நான் எத்தனை நாள் அனுபவிக்க வேண்டுமோ! கொரேசேனன் என்னை எதற்காக இப்பாழான இடத்தி லிருக்கும்படி செய்திருக்கின்றானோ தெரியவில்லை. (சற்றுத் தாமதித்து) அனுதினமும் பெற்ற கிருபம் 'என் பிராணநாதரிட மிருந்து வந்த தில்லை' என்று எனக்குப் புலப்படுகின்றது. ஏதோ எனக்கு அந்நிருப விஷயம் சந்தேகமாகத்தா னிருக்கின்றது.(ஓர்திசையை நோக்கி, திடீரென்று) அதோ! கொரேசேனனும் யாரோ மற்றொருவனும் வருகின்றார்கள். ஹா! என்ன செய்வேன்! என்ன செய்வேன்! ஐயோ!

[கொரேசேனனும் (மந்திரவாதியுடையுடன்) ஜயகேசரியும் பிரவேசிக்கின்றனர்.]

கொ. [ஒரு புறமாக ஜயகேசரியை நோக்கி]

மந்திரவாதியாரே! என்ன? எப்படியும் காரியத்தை முடித்து விடுவீர்களன்றோ—உம—என்ன?

ஜய. ஸ்! எனக்கு அடிக்கடி சொல்ல வேண்டுமா? எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் ஒன்று: தாங்கள் எனக்கு வாக்களித்த படி மட்டும் செய்வீர்க ளென்று நான்—

கொ. என்பேரில் உமக்கு சந்தேகமே வேண்டாம உமதிஷ்டம் எப்படியோ, அப்படி யெல்லாம் செய்ய நான் சித்தமா யிருக்கிறேன்.

ஜய. சரி, தாங்கள் செல்லலாம்.

கோ. அப்படியே.

[போகிறான் ஜயகேசரி கமலாவதியருகிற் செல்லுகிறான்.]

கம. (நடுக்கத்துடன்) ஹா! கடவுளே! நீயே என்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். ஐயோ! ஐயோ!!

[அழுகிறாள்]

ஜய. (மெதுவாக) அம்மணி! அழாதேயுங்கள்.

[ஒரு நிருபத்தைக் கமலாவதியினிடம் கொடுக்கிறான்]

கம. (நிருபத்தைப் பார்த்து ஆவலுடன்) தாங்கள் யார்? தெரியவில்லையே, எனக்கு?

ஜய. (தன் உடையை மாற்றி) அம்மணி! நான்தான். கவலைப்படாதேயுங்கள். இந் நிருபத்திலுள்ளபடி செய்யுங்கள். அது போதும். மற்றவைகளை நான்பார்த்துக் கொள்ளுகின்றேன்

கம (திடுக்கிட்டு) ஹா! ஜயகேசரியரா? நான் இப்பாபி கொடூரசேனன வசத்தி லிருப்பது தங்களுக்கு இப்பொழுது தான் தெரிந்ததோ?

ஜய. அம்மா! ஒன்றும் பேசாதேயுங்கள். கொடூர சேனன் என் மீது சந்தேகம் கொள்ளாம லிருக்கும்படி நான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

[உடையை மாற்றிக் கொண்டு]

சரி, நான் போய்வருகின்றேன். [போகிறான்.]

கம, (மறுபடியும் நிருபத்தைப் பிரித்து) "அம்மணி! கொடூரசேனனிடத்தி லிருந்து, தப்புவதற்கு இதுவே உபாயம்:—தாங்கள் நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாக, கொடூரசேனனிடத்தில் அன்பு அதிகரிப்பது போல் நடித்து, முடிவில் இந்நகர்ப் புறத்திலிருக்கும் அம்பிகையின் ஆலயத்திற்கு, இன்றைக்கு முப்பதாவது நாள் அவனை அழைத்து வருக. வருவீர்களானல், நானும் ஸ்ரீதரரும் அங்கு வந்து தங்களை அவனிடத்திலிருந்து மீட்போம். இவ் விஷயத்தில் மட்டும் அதி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

"ஜயகேசரி"

ஆம் இது சரியான உபாயந்தான். அவரிடம் என்னென்னவோ கேட்க எண்ணினேன். அதற்குள் அவர் போய்விட்டாரே! சரிதான், அவர் சீக்கிரம் சென்றதும் ஒரு காரியத்திற்கு நல்லதுதான். கோபசேனனுக்குத் தன் மீதில் ஒரு சந்தேகமும் ஏற்படக் கூடாதென்றே அவர் விரைவிற் சென்றிருக்கிறார். எல்லாம் கடவுள் செயல்.

(போகிறான்.)

காட்சி முடிகிறது.

K. வெங்கடராமையர்.

விந்தை விரு.

ஆனந்தக் களிப்பு.

எம்விவேகோதய அன்பீர்!—இதற்(கு)
என்றவிடை நன்கு தோன்றுதெனபீர்.
எம்விவேகோதய அன்பீர்!

கண்டேன் ஓர் நல்ல புதையல்—அதைக்
கண்டவர் ஆனந்தம் மண்டும் புதையல்
அண்ட அரிய புதையல்—இந்த
ஆற்றின் இடையிலே ஏற்ற புதையல் (எம்)

ஏற் மதில் சூழ்ந்த புதையல்—அதை
எவரைக்கும் பாம்புகாக் கின்ற புதையல்
பாம்பவி வேண்டாப் புதையல்—சிறு
பச்சிலை அன்பொடு நக்கும் புதையல்

எம்விவேகோதய அன்பீர்!—இதற்(கு)
என்றவிடை நன்கு தோன்றுதெனபீர்
எம்விவேகோதய அன்பீர்.

கிளிச்சிறையிறையனார்

விநோதக் கூற்று.

"ஒரு லோபி பேச்சுக்குப் பேசு, 'காசா லேசா' காசா லேசா!" என்று சொல்லி எவர்க்கும் ஏதும் தராதிருந்தான். வழக்கப்படியே, ஒரு பரம ஏழையிடமும் இல்லையென்று, அவனை. அவன் சொன்னதையே வேறு விதமாக "காசாலே சா!" என்று வயிறெரிந்து கூறிச் சென்றான்.

வாழையிலை அகப்படாத சத்திரம் ஒன்றில் ஒரு பண்டிதர் சாப்பிட நேர்ந்தது. சத்திரக்காரன், "சுவாமி! தாங்கள் தையல் இலையில் சாப்பிட்டு வழக்கமோ" என்ன, பண்டிதர், "நான் தையல் இலையில் சாப்பிடுவதில்லை. தையலே என் இலையில் சாப்பிடுவது வழக்கம்" என்றார்.

அம்பலத்தாடி.

புத்தக மதிப்புரை.

துரேலசீ:—ஐந்தங்கங்களாலாகிய இந்நாடகம், காரைக்குடி கம்பராமாயணப் பிரசாரகர் ஸ்ரீ மெ. வெ. கோவிந்தராஜையங்கார் இயற்றியதாகும். இது படிப்போர்க்கு மிக்க ஆநந்தம் விளைக்கத் தக்க வண்ணமாக இனிய எளிய நடையில் எழுதப்பட்டுளது. சமயத்திற் கேற்ற பாக்கள் சிறந்த இலக்கியங்களிலிருந்து உபயோகிக்கப்பட்டிருப்பது பண்டிதர்கட்குப் பெருமகிழ்ச்சியை விளைவிக்கும். அன்றியும் நூலாசிரியரின் கல்வித் திறனையும் காட்டும். இஃதொரு சிறந்த ஒழுக்க நூலாதலின், இந்நூல்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கத் தக்கதாகும். இதன் விலை ரூ 1. வேண்டுவோர் அதனை இயற்றியோர்க்கு எழுதிப்பெறுக.

அங்கயற்கண்ணி கோவைக் கலிப்பாவும் மதுரைச் சிலேடை வெண்பாவும்—இவை சிலேடைப் பொருட்குறிப்புடன், 'சொல்வளமும் பொருள்வளமும் மார்க்கவிகள் பலவிரைவிற் சொல்ல வல்லோ'ரும் கம்முடன் விகடபாடலை நடத்தி வந்தவருமான ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயர் இயற்றியவையாகும். தாம் பிணிகொண்டு இளைப்புற்றமாறு பக்திச் சுவை கனி சொட்டச் சொட்டப் பாடப்பெற்றவை. கோசகக் கலிப்பாவிலுள்ள 100 செய்யுட்களும் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுரர் மீது பாடப்பட்டவை. நூறு சிலேடை வெண்பாக்களும். இவ்வெண்பாக்களில் முன்னிரண்டடிகளிற் சிலேடையும், பின் இரண்டடிகளில் திரிபும் காணப்படுகின்றன. இவ்விரண்டும் மகைசுவரிய மவுனதாரியரான முறையூர் ஜமீந்தார் ஸ்ரீ. பழ. சி. சண்முகம் செட்டியாரது பொருளுதவியால் வெளி வந்தவை. விலை அணா 4. வேண்டுவோர் கவிராயரவர்கட்கு எழுதிப் பெறுக. —பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

தூத்துக்குடிச் சிவநேசச் செல்வர் சபை:— இதன் 5-வது ஆண்டு நிறைவுவிழா மேமீ 12, 13உ களில், தமிழும் ஆங்கிலமும் வல்ல ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியார் பி. ஏ. பி. எல். யின் அக்ராசனத்தின் கீழ் நன்கு நடைபெற்றது.

12உ அன்று, உபசரணைத் தலைவர் வந்தனோபசாரம் கூறி, காரியதரிசி அறிக்கைப் பத்திரம் படித்தவுடன், சபாநாயகர், 'தமிழும் தமிழரும்' என்பதையும், பண்டிதர் ஸ்ரீ வி. கே. ஸ்ரீநிவாசாசாரியார் 'கம்பராமாயணமும் கற்பும்' என்பதையும், கொக்கிரகுளம் ஸ்ரீ ஆண்டியப்பப் பிள்ளை 'அருள் வனப்பு' என்பதையும், அருப்புக்கோட்டை ஸ்ரீ வே. முத்துசாமி, ஐயர் எம். ஏ. எல். டி. 'சேக்கிழார் பெருமை'யையும், பற்றிப் பிரசங்கித்தனர்.

13உ அன்று, ஸ்ரீ பொன்னம்பலம் பிள்ளை, "சமய கடமை" யையும், பாளையங்கோட்டை வக்கீல் ஸ்ரீ பி. கே. ஆபாசாமிபிள்ளை 'காமதகன பால்' என்பதையும், வக்கீல் ஸ்ரீ எஸ். சோமசுந்தர பாரதி எம். ஏ. பி. எல். 'கம்பரும் தமிழர் கற்பும்' என்பதையும், பற்றிப் பிரசங்கித்தனர். இவை யாவினுக்கும் சபாநாயகர் வெகு அழகாக முடிவுரை கூறினர். அவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

1 "சிவநேசச் செல்வர் சபை" என்னும் தொடரில், 'பதி' என்பது 'சிவம்'. பாசத்தை யறுத்து அச் சிவத்துடன் சேர்மாதல 'நேசம்'. அச் சிவத்தை நேசித்த தொண்டர்கள் குறைவற்ற செல்வர்களாயிருப்பது பற்றி, அதிற் சேர்ந்தோர் 'செல்வர்'. ஆகவே, 'சிவநேசச் செல்வர் சபை' என்ற இச் சபை ஈசுராம்சம் பொருந்தியது.

2 'நமது கடமை' பலவாயினும், முக்கியமாக நமது நாட்டிற்கு அவசியமும் ஜன சமூக முன்னேற்றத்திற்குக் காரணமுமானவை: சிறியோர்க்கு இலவசமாகத் தமிழ் பயிற்றுவித்தலும், அவர்கட்குத் தக்கவாறெல்லாம் சமய போதனை புகட்டலும், அவர்களுடைய நடை உடை முதலியவற்றை நன்கு கவனித்து வருதலுமே. இவை இனிது நிறைவேற, பிராடஸ்டண்ட் கிறிஸ்தவர்கள் தம் குழந்தைகள் பிறந்த சில வருடங்கட்குப் பின், அவர்களை மேற்பார்த்துக் கவனித்து வரவும், தமக்கு யாதொரு கவலையும் சிரமமுமின்றிக் கல்வி, மதம், ஒழுக்கம் முதலியன பயிற்றவும் தக்க 'பயிற்சி சாலை' கலாசாலை, விடுதிகள் முதலிய ஸ்தாபனங்களைத் தக்கோர்களின அதிகாரத்தின்கீழ் ஏற்படுத்தியிருப்பது போல, நாமும் ஏற்படுத்தல் அவசியம். இதற்குத் தீவிர ஊக்கமும், அறிவும், சமயப்பற்றும் மிக்க இத்திரு மந்திர நகரமே முதலாவதாகும். 'திருமந்திரம்' என்பதற்கு விசேஷார்த்தம் இன்னின்ன ஆதலின் அப் பெயர் கொண்ட நகரத்தன்னோர் ஒவ்வொருவரும் இதிற் பின் வாங்காது சிறிது சிறிதாக முயற்சித்துக் காரியத்தைச் சாதிக்க வேண்டும்.

3 'கற்பின் லக்ஷண'மாவது குறித்த முதலுருவம் தவிர பிறிதொன்றில் மனம் செலுத்தாமையும் செல்லாமையுமே. 'கற்பு' ஸ்திரீகட்கு மட்டுமேயன்றி ஆடவர்க்கும் இன்றியமையாததாகும். விவாக சமயங்களில் ஸ்திரீ புருஷர்கள் பரஸ்பரம் உண்மையாக நடந்து கொள்ள வேண்டுமென்பதே உறுதி மொழி. 'ஸ்திரீமட்டும்' அங்ஙனம் இருக்க வேண்டும் 'புருஷன் இருக்க வேண்டியதில்லை' என்று எவ்விடத்தும் எச்சட்டத்திலும் இல்லை. ஆங்கில கவியாகிய எமஸன் "கேவலம் ஸ்திரீகட்கே கற்பு அவசியமென்றில, அது, ஆண்மை வீரம் சதந்தரம் முதலான சகல விஷயத்திலும் மேம்பாடுற்ற வீரதீர புருஷர்களுக்கு எவ்வளவு அவசியம்! என்கிறார். (தற்கால ஆங்கிலக் கவிச் சிங்கங்களின் மேற்கோள்களை நச்சர் உரையினும் வேதவியாசர் உரையினும், மேலாக நம்பும் புண்ணியர்கள் இதனை கவனிக்க) (நிறக.)

அக்ராசனர் பிரசங்கமானதும், வக்கீலும் உபசரணைத் தலைவருமான ஸ்ரீ சூரிய மூர்த்திப் பிள்ளை, சபாநாயகர்க்கும், உபந்யாசகர்க்கும், விஜயஞ் செய்த மகா ஜனங்கட்கும், இன்னிசையுடன் தமிழ்மறை ஓதிய நெல்லை ஸ்ரீ சந்திர ஓதுவார் மூர்த்திகளுக்கும், மாணவிகட்கும், வந்தனங்கூறி, 'ஐரோப்பிய யுத்தம்' நமக்கு அநுகூலமாக முடியுமாறும், அரச அரசியார் நீடு வாழுமாறும் கடவுளைப் பிரார்த்து, பாரத மக்களாகிய நாம் ஒற்றுமையுடனிருக்குமாறு திருவருளைச் சிந்தித்தனர் பிறகு சபை இனிது நிறைவேறியது.

—ரெ. பகவதியானந்தம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் கவனித்துத் தீரக் கடமைப்பட்டவை:—

(1) நாம் கேள்விப் படுகிறபடி, சங்கம் போதிய பொருள் வருவாயின்றி திரவிய கஷ்டமுற்றே நடைபெற்று வருவது உண்மையாயின், வரவுக்குத் தகுந்த செலவே செய்ய வேண்டும். இது சித்திக்குமாறு அநாவசிய சிப்பந்திகளை அகற்றிவிட வேண்டும்.

(2) தமிழ் அபிவிருத்திக்காகவே சங்கம் ஏற்பட்டுள்ளதாதலின், கலாசாலை சம்பந்தமாக இச்சங்கத்தார் முன்னிலும் கவலையும் கருத்தும் கொள்ள வேண்டும். நானா ஜமீந்தார்களினிடத்தும் திரவிய வந்தர்களிடத்தும் கலாசாலைப் போஷனைக்கும் மாணவர்களின் உபகாரச் சம்பளத்துக்கும் எவ்வளவு தொகை வேண்டுமோ அவ்வளவு தொகையையும் வசூலிக்கத் தமிழ்ச்சங்கத்தார் முற்பட வேண்டும். நாமறிந்தமட்டில் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார் தந்துவரும் மாதாந்தொகையாகிய ரூ. 50, புதுக்கோட்டை சம்ஸ்தானத்திலிருந்து கிடைத்து வரும் நிதியின் வட்டி முதலியவற்றையும், மதுரைத் தமிழ்ச்சங்க அச்சாபீஸ் புத்தக விற்பனை முதலியவற்றால் வரும் வருமானத்தில் ஒரு பகுதியையும் முதலில் கலாசாலைக்கு எடுத்து வைத்து விட்டுப் பிறகே மற்ற செலவுகளைக் கவனித்து, செலவுக்கேற்ற சிப்பந்திகளை வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அநேகரிடமிருந்து கலாசாலைக்கும் மாணவர்கட்கு மென்றே வாங்கப்பட்ட கையொப்பக்காரர்களிடம் சென்று, அவர்கள் ஏற்கனவே ஒப்பமிட்டுள்ள பொருளைத் தக்க செல்வாக்குள்ளவர்கள் மூலமாகவோ, ஆள்களை நியமித்தோ வசூலித்து வரச் செய்ய வேண்டும். (இன்னும் வரும்.)

திருநெல்வேலி வாசிகள் குறிப்பிட்டுள்ள தேதி மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தார்க்கு மிக்க அசௌகரியமாயிருக்கின்றமையின் அச்சங்க வருஷோத்ஸவம் ஜூன் 9, 10, 11உ தேதிகளில் நடைபெறும். பிற விபரங்கள் கிடைத்தவுடன் அறிவிப்பாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கக் குறைகளை நாம் இரண்டொரு சஞ்சிகைகளில் எழுதியதன் நிமித்தம், மதுரைத் தமிழ்ச்சங்க உதவிக் காரிய தரிசி, "இவ்வாறு நீர் எழுதிவருகிறீர். பெருஞ் சங்கடத்திற்குள்ளாகா திருக்குமாறு உம்மை எச்சரிக்கிறேன்", என்று சமீபத்தில் நம்மை வரவழைத்துக் கூறினார். இதன் பிறகு நடந்த விஷயங்களை அடுத்த சஞ்சிகையில் அறிவிக்கிறோம்

கோகர் ஞானசம்பந்த நற்சபை முதலியவற்றின் ஐந்தாவது வருட பூர்த்திக் கொண்டாட்டம் இம்மாதம் 18, 19உகளில் திருச்சி ஸப் ஜட்ஜ் ஸ்ரீ: வி. எஸ் பாலசுப்பிரமணிய ஐயரின் அக்ராஸனத்தின் கீழ் நன்கு நடைபெற்றது. பல வித்வான்கள், அரிய விஷயங்களைப் பற்றிப் பிரசங்கம் செய்ததாக அறிகிறோம்.

விசனகரமான மரணம்:— நண்பர் ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக் கவிராயரின் மனைவியார் ஸ்ரீமதி சின்னம்மாள் தமது செல்வத்திருமகள் சிவகாமியம்மையைக் காணத் திடீரென்று 29உ இரவு இவ்வுலக வாழ்க்கையை நீத்த அதி விசனகரமான விஷயத்தை அத்தியந்த துக்கத்துடன் அறிவிக்கின்றோம். பிணிவாய்ப்பட்டு வருந்தும் கவிராயர் அவர்களுக்குக் கடவுளே ஆறுதல் அளிப்பாராக.

—பத்திராதிபர்.

குறைந்த சந்தா! ஆர்டருக்கு முந்துங்கள்!!

1916ஸ் நவம்பர் மாதம் முதல் வெளிவருவது.

கற்பகம்,

இது தமிழ்ப் பாஷையைப் பரவச் செய்து பொது ஜனங்களின்
க்ஷேமத்திற்காக உழைக்கும்

ஓர் இனிய செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா தபால் சார்ஜ் உட்பட

உள்நாட்டிற்கு 0—12—0 வெளி நாட்டிற்கு 1—0—0

இதில் வித்தியா விஷயம், கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், வைத்தியம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க விஷயம், ஜனங்க சீர்திருத்தம், இராஜ பக்தி, நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக் கூற்று முதலான அரும் விஷயங்கள் வித்வத்சிரோமணிகளால் எழுதப்பட்டு வெளிவருவது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் இயன்ற வரையில் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்து நம் பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டுகின்றனம்.

N. B. பத்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு ஒரு வருஷப் பத்திரிகை இனாம்.

மானேஜர்.

"கற்பகம்." புதுவை.

ஞானகாந்தி.

குசாவதி — மூன்று இனிய தமிழ் நாவல்கள். — **காதலி?**

இவற்றின் அருமை பெருமைகள் தமிழ்நாடு முழுதும் அறியும். ஒவ்வொன்றின் விலை அணா —12

அன்பானந்தன் **சந்திரசேகரி**

இவை இரண்டும் அன்பின் உயர்வையும், காதலின் இன்ப துன்பங்களையும், உலகத்தில் உள்ள போலி வேஷங்கள் பலவற்றையும், விளங்கக் காட்டி மனத்திற் பதித்து அறிவைத் திருத்துவன. இனிய நடையில் நவரசங்களும் பொருந்த எழுதப் பெற்றுள்ளன—ஒவ்வொன்றின் விலை ரூ. 1—0—0. கிடைக்குமிடம் 'ராஜேந்திர விலாஸ்' வால்டாக்ஸ் ரோட், சென்னை

ஜ்ஞோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து, அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இப் பத்திரிகையில் கல்வியபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், இந்திய வியவசாயத்தைப்பற்றிய பல விஷயங்கள், கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு, ஜனஸமூகத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், சிறந்த நீதிகளை போதிக்கக்கூடிய கதைகள், நாடகங்கள், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்கள், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்கள் ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல நற்போதங்கள் ஆகிய பல விஷயங்களைக் குறித்துச் சிறந்த கற்றறிந்தவர்களால் வியாசங்கள் எழுதப்பட்டு வருகின்றன. நடை தெளிவானது. சிறுவர் சிறுமியர் முதலியயாவரும் சுலபமாய்ப் படித்தறியக் கூடியது.

வருஷ சந்தா விகிதம்	இந்தியா, பர்மா, சிலோனுக்கு	ரூ. 3—0—0
	வெளிநாடுகளுக்கு	ரூ. 4—8—0

ஔவை.

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதி நூல்களையும் தனிப் பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம், பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ண பரம்பரையை அநுசரித்தும், வேலூர் ஊரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியாரால் எழுதப்பட்டது.

விலை அணா 6

"ஜ்ஞோபகாரி" சந்தாதார்களுக்கு மாத்திரம் அணா 5.

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவர பக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக் கவிஞருமாகிய காரைக்காலம்மையென்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணா 1.

மானேஜர்

ஜ்ஞோபகாரி ஆபீஸ்,

வேலூர்.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸ், திருமங்கலம்.